நான் கண்ட

# நம்பியாரூரன்



ஈழவேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

# தரும் தகவுரை

செந்தமிழ்ச் செல்வர் ஈழவேந்தன் அவர்கள் சிவநெறி நிற்கும் செந்தண்மையாளர் என்பதை ''நான் கண்ட நம்பியாரூரர்'' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை காட்டுகிறது. சமயத்தில் காட்சிகளுக்கும் கிரிகைகளுக்கும் கொடுக்கப்படும் இடத்திலும் பார்க்கக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். சமயக் கதைகளை புனைந்துரைக்கும் வெறும் புராணக் கூற்றுக்களாக மாத்திரம் அறிந்து கொள்ளாமல் வரலாற்றோடு ஒட்டி அவை விளக்கும் மறுமலர்ச்சிக் கருத்துக்களை உணரவைப்பதில் ஈழவேந்தன் மிகத் திறமை வாய்ந்தவர். அவருடைய சொற்பொழிவுத் திறனும் எழுத்துத் திறனும் மிகப் பாராட்டப்படத்தக்கவை. ஞானப் பெருமக்களுடைய காலம் மிகக் குறைவுடையதாக இருந்தபோதிலும் நிறைவான பயனை உலகுக்கு ஈந்தமையைத் தெளிவுபடுத்துகிறார். தமிழிசைக்குப் புத்துயிர் அளித்தவர் சுந்தரர் என்பதையும் அவருடைய பாடல்கள் இறைவனுடன் கொண்ட நெருக்கத்தைக் காட்டுகின்றன என்பதையும் தெளிவுபடத் தரும் விதம் போற்றுதற்குரியது. நகைச்சுவையாக ஆண்டவனோடு உரையாடிய சுந்தரர் ஆன்மீகத்தில் ஊறித் திளைத்த பக்தியுடையவர் என்பதையும் விளக்கி ஒற்றியூர்த் திருப்பதிகத்தைச் சான்றாகக் காட்டுகிறார்.

சாதி இனம் கடந்த தொண்டர் குலத்தையே திருத்தொண்டத் தொகை அறிமுகம் செய்கிறது என்ற கருத்து மிக வரவேற்கத் தக்கது. எல்லாவற்றுக்கும் மேலாக தமிழுணர்ச்சி மிக்கவர் எமது நம்பியாரூரர் என்பதைக் காட்டி ''தமிழ்ப் பெருமாள்'' என்பதையும் நிலைநிறுத்தியுள்ளார் இந்நூலாசிரியர்.

இவருடைய இந்த அற்புதத் தெய்வீகப் படைப்பு சைவத் தமிழுலகுக்கு ஒரு சிறந்த வரப்பிரசாதமாகும்.

தங்கம்மா அப்பாக்குட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் உயிர் ஈந்து தமிழ்காக்கும்
தண்டமிழ்ச் செல்வர் திருவடிகளில்
இந்நூலை ஒப்படைக்கின்றேன்.


நான் கண்ட நம்பியாரூரன்

ஆசிரியர்: ஈழவேந்தன்

முதலாம் பதிப்பு: யூலை, 1974.

விலை: ரூபா 1/-

அச்சுப் பதிப்பு: குமரன் அச்சகம்,
201, டாம் வீதி,
கொழும்பு-12.

வெளியிடுபவர்: மா. க. கனகேந்திரன்
'தமிழகம்'
150, சுபத்திரராம வீதி,
நுகேகொடை,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. முகுந்தன்

# உள்ளே நுழையுமுன்......

நற்றமிழ் இனத்திற்கு நல்வழி காட்டிய நால்வரிடம் எனக்கு நாட்டம் மிக உண்டு. அவர்கள் ஒவ்வொருவர் பற்றியும் பல்வேறு இடங்களில் பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தியதுடன் அவற்றைக் கட்டுரை வடிவிலும் சிறு நூல் வடிவிலும் வரைந்துள்ளேன். இவற்றுள் ''மாணிக்கவாசகர் மாண்பு'' எனும் தலைப்பில் 31-3-70ல் கிழக்கு மாகாணத்திலுள்ள திருக்கோவில் எனும் இடத்தில் நிகழ்த்திய உரையும் 1972ல் திருக்கேதீச்சரத்தில் ''மாணிக்கவாசகர் காலமும் வரலாறும் வளமான பணியும்'' எனும் தலைப்பில் நிகழ்த்திய உரையும் 1974ல் யாழ்ப்பாணத்திலுள்ள கொழும்புத்துறை மன்றிலாடும் பிள்ளையார் கோயிலில் மாணிக்கவாசகர் பற்றி பல்வேறு தலைப்புகளில் நிகழ்த்திய 9 சொற்பொழிவுகளும் என் உள்ளத்திற்கு உவப்பானவை. இவற்றுள் ''மாணிக்கவாசகர் மாண்பு'' எனும் தலைப்பில் யான் நிகழ்த்திய உரை சிறு நூல் வடிவம் பெற்று என் மறைந்த தந்தை திரு. மாணிக்கவாசகர் கனகசபாபதி அவர்கள் நினைவாக வெளியிடப்பட்டது. அத்துடன், அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ''திருவெம்பாவையும் திருப்பாவையும்'' எனும் தலைப்பில் என் ஒப்புநோக்கு ஆய்வுக் கட்டுரை வாசிக்கப்பட்டு தமிழ் அறிஞர்களின் வரவேற்பைப் பெற்றது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வுக் கட்டுரை இந்து சாதனம் இதழில் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளது.

இது போன்றே, சில காலத்திற்கு முன்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய கோயிலில் ''அப்பர் அடிச்சுவட்டில்'' எனும் தலைப்பில் யான் ஆற்றிய உரை ''இந்து இளைஞனில்'' ''திருநாவுக்கரசர்'' எனும் தலைப்பில் தொடர் கட்டுரையாக வெளிவந்திருக்கிறது. மற்றும் புத்தளம் அம்மன் கோயிலிலும், கொழும்பு வரதராசப் பிள்ளையார் கோயிலிலும் ''நாளும் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்'' எனும் தலைப்பில் உரைகள் நிகழ்த்த வாய்ப்புக் கிடைத்தமை என் பெரும்பேறே. இவ்வுரைகளும் கொழும்பு விவேகானந்த சபையின் வெளியீடான ''விவேகானந்தன்'' இதழில் வெளிவந்துள்ளன. இவ்வாறே சுந்தரரைப் பற்றி குருநாகல் சைவ மகாசபையில் ''சுந்தரர் செந்தமிழ்'' எனும் தலைப்பிலும், வவுனியா சுத்தானந்த சன்மார்க்க சபையின் சார்பில் ''நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையான்'' எனும் தலைப்பிலும் கண்டி சைவமகாசபையில் ''தமிழின் பெருமாள் தாள் பணிவோம்'' எனும் தலைப்பிலும் ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றச் சார்பில் ''நம்பியாரூரன் நாமம் நவின்றால் நலம் பெறலாமே'' எனும் தலைப்பிலும், பேசும் வாய்ப்புக் கிடைத்தது. வவுனியாவில் நடைபெற்ற விழாவில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடனும், கண்டியில் நடைபெற்ற விழாவில் பேராசிரியர் திரு. சு. வித்தியானந்தன் தலைமையிலும், கொழும்பில் நடைபெற்ற விழாவில் திருமதி இரத்தின நவரத்தினம் அவர்களுடனும் உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்த நேர்ந்தபோது இம் மூவரும் என் உரையையொட்டித் தெரிவித்த கருத்துக்கள் என் உரைகளை நூல் வடிவிற்கொண்டு வரத் தூண்டுகோலாய் அமைந்தன.

வேறு சொற்களில் விளம்பின், "நான் கண்ட நம்பியாரூரன்", எனும் தலைப்பில் வரையப்பட்டுள்ள இச்சிறு நூல் எனது மேற்குறித்த உரைகளின் உள்ளடக்கம் என்று உரைத்தல் ஏற்புடையதாகும். ஒவ்வோர் அருள்பெற்ற அடியாரையும் ஒவ்வொருவரும் தம் விருப்பம் போல் நோக்குவதற்கு உரிமை உண்டு. அந்த அடிப்படையிலேதான் "நான் கண்ட நம்பியாரூரன்" எனும் தலைப்பில் நம்பியாரூரனை நான் காண்கிறேன். சிவனடியார்களின் வாழ்வைப் பலர் பக்திக் கண் கொண்டு பார்ப்பது வழக்கம். அதற்கு நான் பிணங்கியவனல்லன். ஆயினும், அதே வேளையில், இவ்வடியார்களை வரலாற்று உணர்வுடனும் நாம் வாழ்கின்ற சூழ்நிலையை நினைவிற் கொண்டும் காண வேண்டும் என்பதே எனது நோக்கம். குறிப்பாக, தமிழ் கூறும் நல்லுலகை வாழ்விக்கவிருக்கும் தமிழ் இளைஞர்கள் இன உணர்வும், மொழியுணர்வும், சமய உணர்வும் ஒருங்கே பெற வேண்டும் என்பது எனது விடுதல் அறியா விருப்பம். என் விருப்பினை நிறைவு செய்யும் முறையிலேயே இந்நூலும் வரையப்பட்டுள்ளது.

எனவே, இச்சிறு நூல் என் உள்ளத்தை உந்தும் உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுக்கும் ஒரு நூல் என்று கூறின் அது பொருத்தமுடைய கூற்றேயாகும். தமிழின் அம்மா என்று யான் உரிமையுடனும் உவகையுடனும் அழைக்கும் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், என் உள்ளத்து வேட்கையை நன்குணர்ந்து, இந்நூலுக்கு ஒரு தங்கமான அணிந்துரையை அளித்துள்ளார்கள். இவ்வணிந்துரை இந்நூலுக்கு அணி செய்கிறது; அழகூட்டுகிறது. அவர்கட்கு என் அகம் குழைந்த நன்றி. இந்நூலுக்கு 'மேல்நாட்டுத் தத்துவ தரிசனத்தைத்' தந்த, தத்துவத்துறையில் தனி ஈடுபாடுடைய, திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் வழங்கியுள்ள கருத்துரைக்கும் என் நன்றி என்றும் உரியது. "மில்க் வைற்" உரிமையாளர் திரு. க. கனகராசா பொருளீந்து அருள் சேர்க்கும் புரவலர். அவர் ஈந்த அன்பளிப்பு நினைவுக்குரியது. இந்நூலினை விரைந்தநிலையில் சிறந்த முறையில் பதிப்பித்து உதவிய குமரன் பதிப்பகத்தையும் பாராட்ட விழைகிறேன்.

தாளின் விலை தாங்கொணாத உச்சநிலை அடைந்த நிலையிலும் தமிழின் மீது தணியாத காதல் கொண்டு இந்நூல் வெளியிடப்படுகிறது. எனது முன்னைய நூல்களுக்கு தமிழினம் அளித்த ஆதரவை இந்நூலுக்கும் தொடர்ந்து அளிக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இதனை உங்கள் கைகளிற் தவழவிடுகிறேன். உச்சிமோந்து உவப்பெய்யுங்களெனவுரைத்து விடை பெறுகிறேன்.

வணக்கம்

'தமிழகம்'
150, சுபத்திரராம வீதி,
நுகேகொடை
(இலங்கை)

19 - 7 - 74

அன்பன்
ஈழவேந்தன்

# நான் கண்ட நம்பியாரூரன்

"நாளும் நம்பியாரூரர் நாமம் நவின்ற நலத்தாலே
ஆளும் படியால் அணிமாதி சித்தியான அணைந்தது அதன் பின்"

என்று நம்பியாரூரர் நாமத்தை நாள்தோறும் உச்சரித்ததால் எண் வகைச் சித்திகளை பெருமிழலைக் குறும்பர் எனும் பரமயோகியார் பெற்றார் என்று பெரிய புராணம் பெருமை பேசுகிறது. இக்காரணத்தினாற்ருன் போலும் "தம்பிரான் அருளினலே தவத்தினல் மிக்கோர் போற்றும் நம்பியாரூரர் என்ற நாமம்" என்று நம்பியாரூரரின் நாமத்தை நற்தவத்தோர் நவின்று பெற்ற பேறுகளைச் சேக்கிழார் தன் செந்தமிழ்க் காவியத்தில் நயம்பட விளக்கி சிந்தை நிறைவு எய்துகிருர்.

தமிழின் பெருமாளாக விளங்கிய தம்பிரான் தோழர் வரலாறு பெரிய புராணத்தின் முதல் இடை கடை ஆகிய பிரிவுகள் அனைத்திலும் இனிது இடம் பெறுகிறது. "சைவம் முதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழர் நம்பி" என்று நற்றமிழில் நலம்பல சிறக்க வழுத்தி வாழ்த்தப்படும் வன்தொண்டர், திருத்தொண்டர் புராணத்தில் பாட்டுடைத் தலைவனக பாங்குடன் வீற்றிருக்கிருர். இந்நூலின் ஒவ்வொரு சருக்கமுடிவிலும் சுந்தரர் புகழ் சுடர் விட்டு ஒளிர்கின்றது. எத்திக்கும் புகழ் மணக்கும் தித்திக்கும் இறைவனைப் பித்தா! என்று உரிமையுடன் அழைத்த பெருமை இசைஞானிச் செல்வராகிய நம் ஆரூரருக்கே உண்டு. இதனுற்தான் போலும் பெரிய புராணத்தில் வன்தொண்டரின் வரலாறு முதல் சருக்கமாகிய கயிலாய சருக்கத்தில் தொடங்கி வெள்ளானைச் சருக்கத்தில் முடிவுறுகிறது. பெரிய புராணம் என யாம் பெருமையோடு பேசும் புராணத்திற்கு சேக்கிழார் சூட்டிய பெயர் திருத்தொண்டர் புராணமாகும். இங்கு அவர் திருத்தொண்டர் என்றது சிவனடியார் அனைவரையும் உட்கொள்ள இடப்பட்ட பெயரென பலர் பொருள் கொள்ளினும் இங்கு இவர் 'திருத்தொண்டர்' என்ற பெயரை சுந்தரருக்கே இட்டுள்ளார். ஆகவே, பெரிய புராணம் வன்தொண்டர் வரலாறு பாடும் வளமான காவியம் என்று பொருள் கோர்டும் அறிஞரும் உளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்தொண்டர் காலம் யாது?**

வன்தொண்டர் வாழ்ந்த காலம்பற்றி வரலாற்று ஆசிரியரிடை மாறுபட்ட கருத்து நிலவுகிறதெனினும் "மண்ணுலகம் காவல் பூண்ட உரிமையால் பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை மறுக்கம் செய்யும் பெருமையார்" என்று சுந்தரர் புகழ்ந்து பாடும் தந்தி வன்மன் கி. பி. 880 - 830 காலப் பிரிவிற்கு இடையிலேயே வாழ்ந்ததினுல் வன்தொண்டர் காலம் 8ஆம் நூற்றுண்டு என்று பேரறிஞர் பூரணலிங்கம்பிள்ளை புகன்ற கருத்து ஏற்புடையதாகவே தோன்றுகிறது. மற்றும் "கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற கோமான் காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்" என்று ஆரூரர் குறிப்பது 2ஆம் நரசிங்கவர்மனேயே யென்றும் அவன் காலம் 8ஆம் நூற்றுண்டு முதற் பகுதியென்றும் பேராசிரியர் கா. சுப்பிரமணியம் பிள்ளை கூறும் கருத்தும் சுந்தரர் காலம் 8ஆம் நூற்றுண்டு என்று கொள்வது தவறு அல்ல என்று எண்ண இடம் தருகின்றது.

**சுடர் விட்டு ஒளிரும் சுருங்கிய வாழ்வு**

நற்றமிழுக்கு வாழ்வளித்து நன்னெறியாம் சிவநெறிக்கு உயிர் ஊட்டிய நால்வருள் அப்பர் 81 ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்தார். அருள் வாதவூரர் நாலெட்டில் தெய்வீகம் எய்தினர். தொல் ஞானசம்பந்தர் தன் பதினுறும் அகவையைத் தாண்ட மறுத்தார். நம் சுந்தரரோ மூவாறு ஆண்டுகள் வாழ்ந்து தன் வாழ்வை இனிது முடித்துக் கொண்டார். ஆகவே இவ்வருளாளருள் மூவர் வாழ்ந்த காலம் மிகக்குறுகியது என்பது எமக்குப் புலன் ஆகின்றது. எனினும், இவர்கள் வழங்கிய வளமான கருத்துக்கள் வையம் உள்ளளவும் வாழும் என்பது முடிந்த முடிபாகும்.

**உலகில் உயர்ந்தோர் வாழ்வும் அவ்விதமே**

மேலும் உலகப் பெருமக்கள் வாழ்வை யாம் ஊன்றிக் கவனிக்கும்போது அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தது மிகக் குறுகிய காலம் என்பதையே யாம் உணரத்தக்கதாய் இருக்கிறது. பெரும் கிறித்தவ உலகைக் கட்டியெழுப்பிய இரக்கத்தின் உருவான இயேசுவின் வாழ்க்கை மும்பத்திமூன்றுடன் முடிவுற்றது. மற்றும் செலி, கீட்ஸ், பைரன் போன்ற ஆங்கிலப் பெரும் கவிஞர்களின் வாழ்வும் முப்பத்தைந்தை எட்டிப் பிடிப்பதற்கு முன் முற்றுப்பெற்றது. மற்றும் இந்தியாவில் ஆன்மீக ஒளிபரப்பிய ஆதி சங்கரர், இராமனுயர், விவேகானந்தர் ஆகியோரின் வாழ்வும் நாற்பதை எட்டுவதற்கு முன்பேயே நானிலத்தைவிட்டு நீங்கிய வாழ்வாகவே விளங்கியது. தமிழகத்தில், தமிழுக்கு தலைமைதேடிய பாரதி, பரிதிமாற்கலைஞர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமைப்பித்தன் ஆகியோரின் வாழ்வும் ஈழத்தில் எமக்கு வாழ்வளித்த வன்னியரின் வாழ்வும் இவ்வையகத்தில் நீண்டகாலம் வாழ மறுத்த வாழ்வாய் அல்லவோ விளங்குகிறது. அதுமட்டுமல்ல; எப்படி இயேசுகிறித்து 33 ஆண்டுகள் வாழ்ந்தாலும் அவரின் இறுதி மூன்று ஆண்டுகளே அவருக்கு முடிவிலாப் புகழை அளித்ததோ, அதே போன்றே தனது 16ம் வயதில் திருமணத்தன்று இறைவனால் தடுத்து ஆட்கொண்ட பின்பே இசைஞானிக் செல்வராகிய சுந்தரர் வாழ்வு சுடர் விட்டு ஒளிர்கின்ற வாழ்வாக விளங்குவதை யாம் காண்கிறோம். பதினாறில் தொடங்கி பதினெட்டில் முடிவடையும் இரண்டு ஆண்டு இடைவெளிக்கிடையில் அல்லவா பல்லாயிரக்கணக்கில் பரமன் அருள் வேண்டி பைந்தமிழ்ப் பாடல்களை அவர் பாடினார் என்று எண்ணும் போது எமது வியப்பு பன்மடங்காகப் பெருகுகிறது.

**வனப்பு மிக்க வடிவினன்**

செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் செம்மை சான்ற வாழ்வினை வழங்கிய ஆளுடை அரசர், ஆளுடையபிள்ளை, ஆளுடை அடியார், ஆளுடை நம்பி, ஆகிய நால்வருள் ஆளுடை நம்பிதான் அழகுமிக்க பொன்னார்மேனியனாக பொலிவுற்று விளங்கியதோடு என்றும் மணவாளக் கோலத்துடனேயே வீற்றிருந்தார் என்பதும் பொன்றுப் புகழ்வாய்ந்த அறிஞரின் பொருளுடைக் கூற்றாகும். ''வடிவு நம்பியாரூரன் செம்பொன்மேனிவனப்பாக'' என்று சுந்தரரை சேக்கிழார் ஒரு இடத்தில் குறிப்பிடுவது எம் கூற்றிற்கு வலுவூட்டுகிறது'. ஆரூரருக்கு சுந்தரர் எனும் பெயர் வழங்கப்பட்டதற்கு தேவாரம், திருவந்தாதி, பெரியபுராணம் ஆகிய நூல்களில் சான்றில்லை என்பது அறிஞர் கருத்து. இவரின் சுந்தரவடிவினை உணர்த்த, இவருக்கு சுந்தரர் எனும் பெயர் பிற்காலத்திலேயே வழங்கப்பட்டதென்பது ஆய்வாளர் கருத்து. சில காலத்திற்கு முன்பு பொலனறுவையில் கண்டு பிடிக்கப்பட்ட சுந்தரர் உருவம் அவரின் எழில்மேனி வடிவிற்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. இதையொட்டிய கலைக்குரிசில் ஆனந்த குமாரசுவாமி அவர்களின் கூற்று சுவையுடையது. தனித்து ஆராய்தற்குரியது.

**பல் பெயர் தாங்கிய பாங்குடையோன்**

தம்பிரான் தோழராய் விளங்கிய சுந்தரருக்கு ஆரூரர், இசை ஞானி சிறுவன், ஊரன், சடையன்தன் காதலன், சிங்கடிதந்தை, திருநாவலூரன், திருவாரூரன், நம்பி, வன்றொண்டர், வனப்பகையப்பன், ஆலால சுந்தரர் எனப் பல பெயர்கள் வழங்கப்பட்டதோடு அடித்தொண்டன், அணுக்க வன்தொண்டன், அருங்குலத்து அருந்தமிழ் ஊரன், இளங்கிளை ஆரூரன், மன்னு தொல்புகழ் நாவலூரன் போன்ற சிறப்புமிகு தொடர்களும் அவருக்கு வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நயத்திற்கு நம்பியாரூரர்**

இறைவன் புகழ்பாடிய இறையடியார்களுள் வாக்குத் திறம் கைவந்தவராக அருணகிரிநாதர் விளங்க, கனிவுமிகு சொற்களை கையாள்வதில் வாதவூரர் தலைசிறந்து விளங்கினர். அதுபோன்றே வன்சொற்கொண்டு மிடுக்கோடு தாக்குவதில் திறன்பெற்றிருந்தார் திருஞானசம்பந்தர். நம் நக்கீரரோ நேரியநோக்கோடு சொற்களைக் கையாண்டு வெற்றிபெற, உறுதிபடைத்த சொற்களை நாவுக்கரசர் கையாண்டார். நம் சுந்தரரோ நயம்மிக்க சொற்களைக் கையாண்டு தாம் விரும்பியதைப் பெறுவதில் தேர்ச்சி பெற்று விளங்கினர். ஆம்! மாறுபடும் மன இயல்பு படைத்தோரையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் பெற்றவராய் விளங்கினர் நம் தோடுடைய செவியனின் தோழர்.

இதனாற்தான் —

வாக்கிற்கு அருணகிரி; வாதவூரர் கனிவில்
தாக்கில் திருஞானசம்பந்தர்; நோக்கிற்கு
நக்கீரதேவர்; நயந்திற்குச் சுந்தரனர்
சொற்குறுதிக்கு அப்பர் எனச் சொல்.

என்ற பாடல் தமிழகத்தில் எழுந்தது போலும்.

இவ்விதம் நயம்மிக்க சொற்களைக் கையாளும் "தமிழ்ச் சமர்த்த"ராய் சுந்தரர் விளங்கியதினாற்தான் இறைவனைப் பித்தன் எனக் கருதி தன் பரவையார் பால் தூது அனுப்பினர் என்று சுவையான பொருள்பட

"பித்தர் இறை என்றறிந்து பேதைபால் தூதனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வ தெந்நாளோ"

என்ற தாயுமான அடிகளின் தண்டமிழ்ப்பாடல் பொருள் பொதிந்த பாடலாகும்.

தாயுமான அடிகளார் வழிவந்த இராமலிங்க அடிகளாரும் நம் நம்பியாரூரரின் தெய்வீக ஆற்றலுக்கு தன் இதயத்தைப் பறிகொடுத்து —

"பேரூரும் பரவைமனப் பிணக்கற எம்பெருமானை
ஊரூரும் பலபுகல ஓர் இரவில் தூதன் எனத்
தேரூரும் திருவாரூர்த் தெருவு தொறும் நடப்பித்தாய்
ஆரூரா நின் பெருமை அயன்மாலும் அளப்பரிதே."

என்று மெய்மறந்து பாடுவது இன்ப ஊற்றாக விளங்குகிறது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாலவர் பற்றிய ஒப்புநோக்கு**

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், நம்பியாரூரர், மணிவாசகர் ஆகிய நால்வரின் உளப்போக்கினை ஆராய முனைந்த கலாநிதி வேலுப்பிள்ளை அவர்கள் தனது 'தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்' எனும் நூலில் பக்கம் 90 இல் பின்வரும் கருத்தினை மொழிந்துள்ளார். "அப்பர், சம்பந்தர் பாடல்கள் சிவனிடம் அதிகம் மரியாதை செலுத்து கின்றன. அதிக மரியாதை நெருங்கிய உறவைச் சுட்டாது. அப்ப ரின் தாழ்வு மனப்பான்மை அவரைத் தூரத்திலேயே வைத்திருக் கின்றது. சம்பந்தர் பாடல்கள் சிலவற்றில் ஓரளவு உரிமை உணர்ச்சி காணப்படுகிறது."

"சுந்தரருடைய தோத்திரப்பாடல்களில் பரிகாச வார்த்தைகள் மிகுந்து அவர் இறைவனுடன் விளையாடுபவர் போலக் காணப்படு கிருர். இது நெருங்கிய உறவைக்காட்டுகிறது".

"மாணிக்கவாசகர் பாடல்களில் உறவு பூரணத்துவம் பெறுகிற மனநிலையைக் காணமுடிகிறது. மனத்தை முழுக்க முழுக்கப் பறி கொடுத்துத் தவிக்கும் நிலை மாணிக்கவாசகரது."

**என் கருத்து**

இவருடைய இக்கருத்துக்கள் அனைத்தையும் யாம் அப்படியே ஏற்கமுடியுமா என்பது பெருங்கேள்வியேயாகும். உண்மையில் அவை தனித்து ஆராயவேண்டியவை. எனினும், "சுந்தரருடைய தோத் திரப்பாடல்களில் பரிகாச வார்த்தைகள் மிகுந்து அவர் இறைவனு டன் விளையாடுபவர் போலக் காணப்படுகிருர். இது நெருங்கிய உறவைக் காட்டுகிறது" என்று கூறியுள்ள சொற்கள் யாம் முழு மையாக ஏற்கத்தக்கவையேயாகும். உண்மையில் நாம் நால்வரின் தமிழையும் ஒப்புநோக்கி சுருக்கி விளக்குவதாயின் ஞானசம்பந்தரின் தமிழை கொஞ்சும் தமிழ் என்றும் நாவுக்கரசரின் தமிழை கெஞ் சும் தமிழ் என்றும் நம்பியாரூரரின் தமிழை விஞ்சும் தமிழ் என்றும் மணிவாசகரின் தமிழை உள்ளம் உருக்கும் தமிழ் என்றும் கூறுவது பொருத்தமுடையதே.

மேலும் இந்நால்வரின் பாடல்களில் தனித்தனி இயல்பை ஆராய்ந்துள்ள கலாநிதி வேலுப்பிள்ளை அவர்கள் "சுந்தரரும் மணி வாசகரும் வாழ்ந்தகாலம் தமிழ்நாட்டில் சமணம் புத்தம் முதலிய மதங்களின் வெளித்தாக்கம் இல்லாததினுல் வெளிப்பகையைப் பார்க் கிலும் அகப்பகையை நீக்குவதிலேயே இவர்கள் பாடல்கள் அமைந் துள்ளன" என்றும், ஆனுல் ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடல் கள் சமணம் புத்தம் முதலிய சமயங்களைத் தாக்கும் பாடல்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குவதைக் காணலாம்" என்றும் தெரிவித்துள்ள கருத்துக்களில் ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் பாடல்கள் பற்றி அவர் மொழிந்துள்ள கருத்துக்களை யாம் முழுமையாக ஏற்பதில் எவ்விதத் தவறுமில்லை. மற்றும் சுந்தரர் வாழ்ந்த காலத்தில் புறச் சமயத்தாக்கம் இல்லாதிருந்ததினுல் சுந்தரரின் பாடல்கள் அகப் பகையை நீக்கும் நிலையிலேயே பாடப்பெற்றென எனும் கருத்தும் யாம் ஏற்கத்தக்கவையே. ஆனல் மணிவாசகரின் பாடல்கள் பற்றி அவர் தெரிவித்துள்ள கருத்துக்களை அப்படியே ஏற்பதில் சிறுகடினம் உண்டு. ஞானசம்பந்தரையும் நாவுக்கரசரையும் எதிர் நோக்கிய பெரும் நெருக்கடி மாணிக்கவாசகர் காலத்தில் ஏற்படவில்லை என்பது உண்மையெனினும் "புத்தம் முதலாய புல்லறிவுப் பல் சமயம்" "நாத்தழும்பேறிய நாத்திகர்" போன்ற வன்மை மிகு சொற்ருெடர்களைக் கையாளும் அளவிற்கு புத்தமதம் போன்ற புறநெறிகளின் தொல்லை மணிவாசகருக்கும் இருந்ததென்பதை எடுத்துக் காட்டுகிறது; எனினும் அவற்றின் விரிவு ஈண்டு வேண்டாம்.

**நால்வரின் நால்வகை நெறி.**

இறைவன் அருளை வேண்டி நிற்பதில் நால்வருக்கிடையில் எவ்வித வேறுபாடுமில்லையெனினும் அவர்கள் வாழ்ந்து காட்டிய நெறி நால்வகைப்பட்டே விளங்கின. ஞானசம்பந்தரின் நெறி நற்புதல்வர் நெறி அல்லது சற்புத்திரமார்க்கமாக விளங்க, நாவுக்கரசரின் நெறி அடிமை நெறி அல்லது தாசமார்க்கமாக விளங்கியது. மற்றும் நம்பியாரூரன் தோழர் நெறி அல்லது சகமார்க்கம் எனும் துறையில் நிற்கையில், மணிவாசகர் நன்னெறியில் அல்லது சன்மார்க்க நெறியைத் தழுவிநின்ருர். வேறு சொற்களில் விளம்பின் அப்பர் உடல் உழைப்பு (சரியை) நிலையிலும் ஆளுடைப்பிள்ளை செயல் (கிரியை) நிலையிலும் சுந்தரர் ஒருமை (யோக) நிலையிலும் மணிவாசகர் அறிவு (ஞானம்) நிலையிலும் நின்று இறைவனை உணர்ந்தனர் என்று இயம்புதல் ஏற்புடையதாகும். இவ்விடத்தில் சுந்தரர் நின்ற யோக நெறியின் இயல்புபற்றி ஒளவை துரைசாமி மொழிந்துள்ள கருத்து ஆழமிக்குடையதாய் அமைந்துள்ளதால் அதனை அப்படியே இங்கு எடுத்தாழுதல் பயன்தருவதாகும். "இறைவன் உயிரின் உள்ளத்துள்ளே நிற்கும் ஒண்பொருள், அவனை உள்ளத்துள்ளே ஓர்ந்து உணர்வது யோகம். அவ்வாறு உணர்வார்க்கு அவன் நாபிக்கு மேலே ஓர் நால் விரல் நடுவிற்காட்சியளிப்பான். அவ்விடத்தேயவன் சிந்தித்து என்றும் நினைந்தெழும் அன்பர் சிந்தையில் திகழ்கின்ருன். அவ்வாறு திகழ்வதால் சிந்திக்கும் அன்பரது சிந்தை திருத்தம் எய்துகின்றது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைகள் வகுக்கப்பட்ட முறை

இனி திருமுறைகள் வகுக்கப்பட்டிருக்கும் முறையைப் பார்க்கையில் ஞானசம்பந்தரின் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும் நாவுக்கரசரின் பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தரரின் பாடல்கள் ஏழாந் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளதை யாம் காண்கின்றோம். திருமுறை கண்ட புராணம் சுந்தரர் பாடிய திருப்பதிகங்கள் முப்பத்தெண்ணாயிரம் என்றும் பண்முறையாகத் தொகுக்கப்பட்டபோது 100 பதிகங்களே கிடைத்தன என்றும் குறிக்கின்றது. பதிகம் என்ற சொல் பத்துப்பாடல்களையே குறிக்கின்றனவெனினும் சில பதிகங்கள் 11, 12 பாடல்களையும் கொண்டு விளங்குவதனால் சுந்தரரின் பதிகங்கள் நூறாய் விளங்கினும் அவற்றின் உள்ளடக்கம் 1026 செய்யுட்களாகும். எமக்கு வாழ்வளித்த நால்வரும் இந்நானிலத்தில் வாழ்ந்த ஆண்டுகளை மரபு வழியாக ஏற்கின் பாடும் பணியில் மிகக்குறுகிய கால வாய்ப்பைப் பெற்றவர் நம் சுந்தரர் என்றே கொள்ள வேண்டியிருக்கின்றது.

## தமிழ் இசைக்குப் புத்துயிர் அளித்தவர்

தமிழ் இசைக்கு புத்துயிர் அளித்த நாயன்மார்களுள் இருவர் தலை சிறந்து விளங்குகின்றனர். இவர்களுள் நாளும் இன்னிசையால் தமிழ் ப்ரப்பிய ஞானசம்பந்தர் முதன்மை இடம் வகிக்கின்றார். அதற்கடுத்த நிலை நம் சுந்தரருக்கே உண்டு. இறைவனை "ஏழிசையாய்இசைப்பயனாய்" என்றும் "பண்ணிடைத்தமிழ் ஒப்பாய்" என்றும் "இருந்து நீர் தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசுநித்தல் நல்கினீர்" என்றும் இறைவனை இசைவடிவில் அதிலும் அவனைத் தமிழ் இசைவடிவில் அந்தத் தமிழ் இசைக்காக உருகுகின்ற தன்மையில்வைத்து இறைவனைக் காண்பதில் எல்லையற்ற இன்பம் கண்டவர் சுந்தரர். தமிழின் பெருமாளின் தமிழ் இசைப்பாக்களை இந்தளம் முதல் பஞ்சமம் ஈறாக 17 பண்களாக தமிழ் இசைவல்லுநர் வகுத்துள்ளனர். இவற்றுள் தக்கேசிப் பண்ணில் 17 திருப்பதிகங்களும் நட்டராகப் பண்ணில் 14 திருப்பதிகங்களும் இந்தளத்தில் 12 பதிகங்களும் ஏனையவற்றுள் ஒன்றும், மூன்றும், நான்கும், ஐந்தும், ஏழும், ஒன்பதுமாக உள்ளனவென்று அவர்கள் மேலும் மொழிவர். ஒப்புநோக்குகையில் ஞானசம்பந்தரின் பாடல்கள் 23 பண்களாகவும், நாவலூராரின் பாடல்கள் 17 பண்களாகவும் வகுக்கப்பட்டிருப்பதை யாம் காணலாம். மேலும் ஒப்புநோக்குவதில் சுவைகாணும் அறிஞர், ஞானசம்பந்தரின் அற்புதப்பதிகங்கள் 23 என்றும் சுந்தரரின் அற்புதப் பதிகங்கள் 27 என்றும் மொழிவர். ஆகவே சுந்தரர் கூடிய அற்புதங்களைச் செய்தார் என்று யாம் கொள்வதற்கு — என்று யாம் ஊகிப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் உண்டு என்று கூறின் எவரும் தவறு என்று கொள்ளார் என்று நம்புகின்றோம். பொதுவாக மூவர் பாடல்களும் தேவாரம் என்று குறிக்கப்படினும் ஞானசம்பந்தரின் பாடல்களை "திருக்கடைக் காப்பு" என்றும் நாவுக்கரசரின் பாடல்களை "தேவாரம்" என்றும் சுந்தரரின் பாடல்களை "திருப்பாட்டு" என்றும் அழைப்பதே ஏற்புடையதென்பது அறிஞர் முடிவு. சுந்தரரின் இத்திருப்பாட்டை "சந்தனப் பொதியத் தடவளரைச் செந்தமிழ்ப் பரமாசாரியார்" என்று பாராட்டப்பெற்ற அகத்தியனார் எட்டுவகையில் ஆராய்கின்றார். அவையாவன: 1. குருவருள், 2. வெண்ணீறு, 3. அஞ்செழுத்து, 4. கோயில், 5. சிவன் உருவம், 6. திருவடி, 7. அருச்சனை, 8. அடிமை. இதை ஒரு பழம்பாடல் பின்வரும் முறையில் இனிது தொகுத்துக்கூறுகின்றது.

"குருவருளும் வெண்ணீறெழுத்தஞ்சும் கோயில்
அரனுருவும் என்த லைமேலாக்கும் — திருவடியும்
சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க்கென்று
இட்டார் அகத்தியனார் எட்டு"

இவ்விதம் பல்துறையில் திறம்பட விளங்கிய சுந்தரரின் திருப்பாட்டிற்கு பின்வரும் இசைக்கருவிகளாகிய தக்கை, தண்ணுமை, தாளம், வீணை, தகுணிச்சம், கிணை, சல்லரி, கொக்கரை, குடமுழவு ஆகியவை மெருகூட்டின என்றும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமுடையதேயாகும்.

### தோழமை நெறி:

உலகில் மனிதன் பெறும் உணர்ச்சிகளுள் தோழமை உணர்ச்சி தனிச் சிறப்புடையதாக விளங்குகிறது. ஒத்துப்பழகி ஒன்றையும் ஒழிக்காது உரிமையோடு கேட்டுப் பெறுகின்ற பண்புதோழமை உணர்ச்சிக்குண்டு. இப்பண்பை தன் சார்பில் முழுமையாகப் பயன்படுத்தி இறைவனைப் பித்தா! என்றும் பேயா! என்றும் உரிமையோடு அழைத்து தான் விரும்பிய அனைத்தையும் பெற்றவர் தம்பிரான் தோழர்.

எடுத்துக்காட்டாக -

"வம்பமரும் குழலாள் பரவை இவள் வாடுகின்றாள்
எம்பெருமான் அருளீர் அடியேன் இட்டளம் கெடவே"

என்றும்

மைத்து ஆடும் தடம் கண் பரவை இவள் வாடாமே
அத்தா! தந்தருளாய், அடியேன் இட்டளம் கெடவே"

என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோளிலி எம்பெருமான்! குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆள் இலே, எம்பெருமான்! அவை அட்டித்தரப்பணியே"

என்றும்

"கந்தமுதல் ஆடை ஆபரணம் பண்டாரத்தே
எனக்குப் பணித்தருளல் வேண்டும்"

என்றும்

"கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும்"

என்றும் அவர் பாடிய பாடல்கள் தன் உலகியற் தேவைகள் அனைத்தையும் இறைவனை வேண்டிப் பெற்றார் என்பதற்குத் தலைசிறந்த சான்றாய் விளங்குகிறது. ஏனைய அடியார்களுடன் ஒப்பிடும்போது ஏனைய அடியார்கள் எவராவது சுந்தரர் போல் தன் வாழ்வின் தேவைகளை, அதுவும் சிறுசிறுவிடயங்களைக்கூட இறைவனை வேண்டிப் பெற்றதற்குச் சான்று உண்டோ எனின் இல்லையென்றே இயம்ப வேண்டியிருக்கிறது. அது மட்டுமா, சுந்தரர் ஒரு பெண்ணை மணப்பதைத் தடுத்த மங்கை மணாளன் இரு மங்கைகளை அவருக்கு மணம் செய்து வைத்த நிகழ்ச்சியையும் வேறு ஒரு அடியார் வாழ்வில் காணமுடியுமா என்பதும் ஒரு பெரும் கேள்வியேயாகும்.

**இரு உலக இன்பங்களையும் இறைஞ்சி நின்றவர்:**

.. இவ்விதம் யாம் கூறுவதால் நம் ஆரூரர் இம்மைத் தேவைகளை மட்டும் இறைவனிடம் பெற்று நிறைவெய்தியவர் என்று எவரும் பொருள் கொள்ளல் தவறாகும். அவர் இம்மை இன்பங்களை வேண்டி நின்றதோடு மறுமைக்கு மிக இன்றியமையாத இன்னருளையும் இறைவனிடம் இறைஞ்சி நின்றதற்கும் தன் தவறுகளுக்காக தவித்ததற்கும் தன் பிழைகளையெல்லாம் ஆண்டவன் பொறுத்தருளல் வேண்டும் என்பதற்கும் இறைவனின் இனிய நண்பனாய் தான் விளங்கிய நிலையிலும் அவ்விறைவனின் இயல்பை எடுத்துரைத்தல் எளிதல்ல என்ற ஆழ்ந்த மெய்விளக்கத்தை – தத்துவத்தை உணர்த்துவதிலும் சுந்தரர்க்கு நிகர் சுந்தரர் தான் என்பதற்கு –

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழை எலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறிய ஒண்ணா
எம்மானை, எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழனத்தணி
ஆரூரனை மறக்கலும் ஆமே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அழகுமிக்க ஆழம் நிறைந்த பாடல் சான்ருய் அமைகிறது. இப்பாடலில் வரும் "இன்ன தன்மையன் என்று அறிய ஒண்ணு எம்மானை" என்ற வரி "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கு சோதிக்க வேண்டாம் இறைவனை", அவனை உய்த்து உணர்ந்தே அருள் பெறவேண்டும் என்று பொருள்பட ஞானசம்பந்தர் பாடிய பாடலின் எதிரொலியாக அமைந்திருப்பது ஒப்புநோக்கி இன்புறத் தக்க சொற்ருெடராகும்.

**பொருள் பொதிந்த நகைச் சுவை:**

அத்தா! ஆயா! அன்னே! அடிகேள்! ஆதி! அண்ணு! ஆளாய்! ஆற்ருய்! அழகா! என்று அழகு தமிழில் அடுக்கு மொழியில் ஆண்டவனை அழைத்து அகம் குளிர்ந்த நம் ஆலால சுந்தரர் நயத்திற்கும் நகைச்சுவைக்கும் நம்பியாரூரர் என்று நவிலத்தக்க முறையில் நயத்துடனும் நகைச்சுவையுடனும் நம்மையாளும் நாதனை அழைத்து, தன்னைச் சூழ்ந்துள்ள கொடுவினைகள், தொல்லைகள் தீர துணைநிற்க வேண்டும் என்பதை,

"அகத்தில் பெண்டுகள் நான் ஒன்று சொன்ஞல்
அழையேல்போ குருடா எனத்தரியேன்
முகத்தில் கண் இழந்து எங்ஙனம் வாழ்வேன்
முக்கண்ணு! முறையோ! மறை ஓதி!"

என்றும்

'மூன்றுகண் உடையாய்! அடியேன் கண் கொள்வதே கணக்கு வழக்காகில்
ஊன்றுகோல் எனக்காவது ஒன்று அருளாய்! ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே"

என்றும்

"எற்றுக்கு அடிகேள் என் கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்;
மற்றைக்கண்தான் தராது ஒழிந்தால் வாழ்ந்து போதீரே."

போன்ற சொற்ருெடர்களில், தான் குருடன் என்பதிஞல் தன்வீட்டுப் பெண்கள் தன்னை மதிக்க மறுப்பதையும், முக்கண்ணனுகிய நீ என் இருகண்களையும் பறிப்பது நீதியோ என்றும், மூன்று கண்ணுடைய நீ யான் இழந்த கண்ணைத்தான் தராது விட்டாலும் ஊன்று கோல் ஆகுதல் தா என்று வேண்டுவதிலும், என் கண்ணைக் கொண்டதிஞல் நீர் தான் பழியேற்றீர் என்றும் என் மற்றக் கண்ணைத் தராது வாழ்ந்திடுவீரோ பார்ப்போம் என்றும் எவ்வளவு எளிமையான சொற்களை சொற்சுவையோடும், பொருட் பொலிவோடும், நகைச்சுவையோடும் உரிமை உணர்வோடும் அவர் மொழிகிருர். ஆலால சுந்தரரின் கோலாகலமான இச் சொற்ருெடர்கள் நம் சுந்தரரின் பல்துறைப்பண்பில் எந்தப் பண்பையாம் எடுத்து வியந்து போற்றுவது என்ற திகைப்பினை எமக்கு ஏற்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துன்ப அனுபவம் இனிய பாடல்களின் விளைநிலம்**

ஆன்மீகத்தில் ஊறித்திளைத்த நம் ஆரூரர் உலக நிகழ்ச்சிகளையும் ஊன்றிக் கவனிக்கும் ஆற்றல் பெற்றவராய் விளங்கினார். 'நாம் ஆட்டிலே பால் கறக்கிறோம். கறக்கின்ற பாலிலே ஆட்டுப் பிழுக்கை (யாம் புழுக்கை என்று கூறுவது வழக்கம்) விழுகிறது. இக்காரணம் கொண்டு யாம் ஆட்டுப் புழுக்கையையும் பாலையும் தூக்கியெறிவதில்லை. யாம் தூக்கியெறிவது ஆட்டுப் புழுக்கையை மட்டுந்தான். இந்நிகழ்ச்சியை — இவ்வனுபவத்தை வைத்து சுந்தரர் என்ன சொல்லுகிறார்; எப்படி ஆட்டிற் பால் கறப்போர் விழுகின்ற ஆட்டுப் பிழுக்கையை நீக்கி ஆட்டுப்பாலைக் கொள்கின்றனரோ அதுபோல் ஆண்டவா நீயும் என் பிழைகளை நீக்கி என் குறைகளை மறந்து உன் பெயரை அன்றி வேறு ஒரு பெயரை உச்சரிக்காத நல்ல பண்பு இருக்கிறதே! அதன் பொருட்டாயினும் நீ என் குருட்டை நீக்கி ஆட்கொளல் வேண்டும் என்கிறார். இதோ இப்பொருள் கொண்ட சுவை சொட்டும் பாடல் -

"அழுக்கு மெய்கொடுன் உன்திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள்
பிழைப்பனாகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் நின்திருப்பெயர் அல்லால்
மற்று நான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என் கணுக்கு ஒரு மருந்து உரையாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே."

தம் ஆற்றொணாத்துயரை நம் ஆலால சுந்தரர் எடுத்தாளும் முறையினை எண்ணுகையில் "Sweetest things are said of the saddest thoughts" (துயர் தோய்ந்த எண்ணங்களே இனிய சொற்களாக உருவெடுக்கின்றன) என்றும் "They teach in song what they learn in suffering" (தம் துன்ப நுகர்வுகளையே பாடலாகப் பயிற்றுவிக்கிறார்கள்) என்றும் ஆங்கிலப் பாவலர் பகர்ந்த சொற்றொடர்கள் எம் நினைவலைகளில் மோதுகின்றன.

**அடக்கத்தின் உறைவிடம்**

தம்பிரான் தோழர் எனத் தாரணி புகழ வாழ்ந்தவர் நம் தமிழின் பெருமாள். இத்தகைய புகழின் உச்சத்தில் இவர் வாழ்ந்தார் எனினும் "யான் அகிலத்தை ஆட்டிப் படைக்கும் ஆண்டவனின் அரிய நண்பன், ஆகவே யான் அனைவர்க்கும் மேலானவன் — உயர்ந்தவன், என்ற தற்பெருமை - நான் எனும் செருக்கு என்ற அழித்தொழிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கீழ்ப்பண்பு நம் சுந்தரரிடம் என்றும் தலைகாட்டியதில்லை. மாறாக இவர் அடக்கத்தின் திருவுருவமாக - உறைவிடமாக விளங்கியவர் - அவரின்

"பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார்கள் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே;"

என்ற பாடல் அவரின் அடியவர்க்கு அடியவராய் விளங்கும் எல்லையற்ற அடக்க உணர்விற்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாகும்.

## ஆரூரர் பூண்டது ஆன்மீக அடிமையே

இப்பாடலில் வரும் "அப்பாலும் அடிசார்ந்த அடியார்" என்ற சொற்றொடர் கடல் கடந்த நாடுகளிலும் வாழும் அடியார்களையும் இனி வாழப்போகின்ற அடியார்களையும் உள்ளடக்கும் என்று அறிஞர் பொருள் கொள்வர். இவ்விடத்தில் சுந்தரர் பூண்ட அடிமை வெறும் உலகியல் அடிமையல்ல மிக உன்னதமான யாம் வழுத்தி வாழ்த்துதற்குரிய ஆன்மீக அடிமை என்பது நினைவிற் கொள்ளுதற்குரியது.

தனக்கு முன்பு வாழ்ந்த ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் மிதித்த புனிதத்தலங்களை தான் மிதிக்க அஞ்சுவதாக அரற்றும் நம் ஆரூரர் "நல்லிசை ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பான்" என்று மொழிந்த மொழிகள் எம் உள்ளம் உருக்கும் தன்மையுடையனவாகும்.

தன்னடக்கம் அடியவர்களின் தனியுடமை (Humility is the special possession of saints and sages) எனும் கூற்று சுந்தரர் வாழ்விற்கு முற்றும் பொருந்தும் கூற்றாகவே மிளிர்கிறது.

## வள்ளுவர் வழிவந்த வன் தொண்டர்

வள்ளுவர் வழிவந்த வண்டமிழ் வல்லுநர் அனைவரும் வள்ளுவர் பாடல்களை மேற்கோள் காட்டியும் அவர் பாடல்களைத் தழுவியும் அக் கருத்துக்களை உள்ளடக்கியும் பாடியுள்ளதற்கு சான்றுகள் நிறைய வுண்டு. இம்மரபைப்பேணிய நம் வன்தொண்டரும் "பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் நீடு வாழ்வார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறட்பாவைத் தழுவி "பொறிவாயில் இவை ஐந்தனையும் அவியப்பொருது உன் அடியே புகும் சூழல் சொல்லே" என்றும் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு" என்ற பாடலைத் தழுவி "அகரம் முதலின் எழுத்தாகி நின்ருய் அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே" என்றும் "உறங்குவது போலும் சாக்காடு உறங்கிவிழிப்பது போலும் பிறப்பு" என்னும் பாடலைத் தழுவி "இளமை உறங்கி விழித்தா லொக்கும் இப்பிறவி" என்றும் இனிமை பொங்க உயர் கருத்துக்களை வழங்கியுள்ளார்.

**ஆகமமும் ஆரூரரும்**

ஆண்டவன் அருளினுலேதான் ஆகம நூல்கள் எழுந்தன என்பதை வலியுறுத்த விரும்பிய நம் ஆரூரர் "அண்டர் தமக்கு ஆகம நூல் மொழியும் ஆதி" என்றும் "ஆகமசீலர்க்கு அருள் நல்கும் பெம்மான்" என்றும் பாடிய பாடல்கள் ஆகமங்களின் ஆழத்தை எமக்கு உணர்த்தி நிற்கின்றன. இக்கருத்தினுற் கவரப்பட்டுப் போலும் இராசசிம்மன் பல்லவவேந்தன் தன்னை "ஸ்ரீ ஆகமப் பிரியன்" என்று கைலாசநாதர் கோவிற் கல்வெட்டில் பொறித்துள்ளான்.

**நிலைச்செண்டு**
**பரிச்செண்டு**

சுந்தரரது வாழ்வும் பணியும் எமது ஆன்மீக ஈடேற்றத்திற்கு மட்டும் உதவவில்லை. மாருக, அவர் வாழ்ந்த காலத்தில் நிலவிய சில நிகழ்ச்சிகள் எம் பண்டைய தமிழகத்தின் தன்மையை அறியவும் துணை செய்கின்றன. சுந்தரரின் வாழ்வில் இருந்து, அவர் வாழ்ந்த காலத்தில் இருந்த எம் முந்தையோர் யாம் இன்று விளையாடும் ரெனிஸ் (Tennis) போன்ற நின்று எறியும் விளையாட்டான நிலைச்செண்டு விளையாட்டையும், இன்று யாம் குறிக்கும் போலோ (Polo) போன்ற குதிரைப் பந்து விளையாட்டான பரிச்செண்டு விளையாட்டையும் விளையாடி மகிழ்ந்தனர் என்பதற்குச் சான்றுகள் உண்டு.

**சடையன்தன் காதலனும் சட்டத்துறையும்**

காலத்தின் தேவையை நிறைவேற்று முறையில் சட்டத்துறையிலும் தமிழ் துலங்கவேண்டும் என்று இன்று யாம் விரும்புகின்றேம். இன்று யாம் கையாளும் சட்டச் சொற்களான Prescriptive Right இற்கு ஆட்சி உரிமை என்றும் Precedent இற்கு முன்மாதிரி என்றும் Document இற்கு ஆவணம் என்றும் Evidence சாட்சி, சான்று என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Plaint & Complaint தொடைவிடை என்றும் Written Statement and of the degree தோலாத் தொடையென்றும் original document மூல ஓலை என்றும் Copy of the Document படியோலை யென்றும் Evidence of Neighbours அயலார் சாட்சி என்றும், Circumstantial Evidence சூழ் நிலைச் சாட்சி என்றும் Safe Custody அரண் தரு காப்பு என்றும் அரிய இனிய எளிய எவரும் ஏற்கத் தக்க சொற்கள் சுந்தரர் வரலாற்றில் கையாளப்பட்டிருப்பதற்குப் போதிய சான்றுகள் உண்டு. மற்றும் திருவெண்ணெய்நல்லூரில் அந்தணர் பேரவையும் பழைய னூரில் வேளாளர் பெருமன்றமும் இருந்தமைக்கும் நல்ல சான்றுகள் உண்டு. எனவே, யாம் விரும்பி வரவேற்கும் தமிழின் சட்டத்துறை வளர்ச்சிக்குக்கூட சடையன்தன் காதலனாகிய சுந்தரரின் வாழ்வு துணை நிற்பது சுவையூட்டுவதாய் அமைகிறது.

**வரலாற்று உணர்ச்சிக்கு வித்திட்டவர்**

வரலாற்று உணர்ச்சியே உரிமைக்கு வித்து என்கிறோம். ஆனால், அந்த வரலாற்று உணர்வு தமிழருக்கில்லாததே எமக்குக் கவலை தருகிறது. வரலாற்று உணர்வு பெறுகிறபோது தான் எம் வாழ்வு வளம் பெறுகிறதென்பதை நாம் உணர்தல் நலம். இந்த வரலாற்று உணர்வை — ஓரளவு காட்டும் முறையிலேயே சுந்தரர் பணி சிறந்து விளங்குகின்றது. சுந்தரரின் திருத்தொண்டர் தொகையே சிவனடியாரின் வாழ்வைத் தொகுத்துக் கூறும் முதல் நூலாக அமைந்துள்ளது. சுந்தரரின் திருத்தொண்டர் தொகையே நம்பியாண்டாரின் திருவந்தாதி தோன்றக் காரணமாய் இருந்தது. அது போன்றே திருத்தொண்டர் திருவந்தாதியே சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் தோன்ற வழிகோலியது ஆனால் இவை அனைத்திற்கும் வித்தாக விளங்கியது சுந்தரரின் திருத்தொண்டர் தொகையே என்பது ஈண்டு வலியுறுத்தற்குரியது. வேறு சொற்களில் விளம்பின் 8ம் நூற்றாண்டில் தோன்றிய சுந்தரரின் திருத்தொண்டர் தொகையே 10ம் நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பியின் திருவந்தாதியாக முளைத்தது. அதுவே 12 ஆம் நூற்றாண்டில் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமாக மலர்ந்தது. எப்படி பதிப்பித்தற் துறையில் நாவலர் அடித்தளம் இட தாமோதரனார் சுவர் எழுப்ப, சாமிநாதையர் கூரை வேய்ந்தாரோ அவ்விதமே நம்பியாரூரர், நம்பியாண்டார்நம்பி சேக்கிழார் ஆகிய மூன்று மூதறிஞரின் பணி முடிவிலா இன்பம் நல்கியபடி துலங்குகிறது.

**ஓர் குலத்தை உணர்த்தும் திருத்தொண்டர் தொகை**

சாதி இனம் கடந்த தொண்டர் குலத்தையே சுந்தரரின் திருத்தொண்டர் தொகை எமக்கு அறிமுகம் செய்கிறது. இத்திருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர் தொகையில் சோமாசிமாறர் போன்ற வைதிகப் பேரறிஞரும் சிவகோசிரியார் போன்ற ஆகம அறிஞரும், பொய்யடிமையில்லாத புகழ்பூத்த புலவர்களும், நெடுமாறன், கழற்சிங்கன் போன்ற பேரரசர்களும், ஏயர்கோன் கோட்புலி போன்ற சிற்றரசர்களும் அதிபத்தர் போன்ற மீனவரும், திருநீலகண்டர் போன்ற குயவரும் திருக்குறிப்புத்தொண்டர் போன்ற வண்ணாரும், கண்ணப்பர் போன்ற வேடவரும் கடவுள் அடியவராய் காட்சி கொடுக்கும் தன்மைகண்டு இன்பக்கண்ணீர் விடுகிறோம். எம் இதயமும் இறையோடு ஒன்றி ஒப்பிலா நிலை அடைகிறது.

**தென் திசை வாழ எழுந்தது திருத்தொண்டர் தொகை**

இதனாற்தான் போலும் "திசை அனைத்தின் பெருமை யெல்லாம் தென்திசையே வென்றேற அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்லத் தோன்றியவர் நம் தோணிபுரத் தோன்றலாகிய நம் தமிழ் ஞானசம்பந்தர் என்று வாழ்த்திய நம் செந்தமிழ்ச் சேக்கிழார் "ஈசன் அடியார் பெருமையினை எல்லாவுயிரும் தொழ எடுத்துத் தேசம் உய்யத் திருத்தொண்டத்தொகை முன் பணித்த திருவாளன்" என்றும், மாதவம் செய்த தென்றிசை வாழ்ந்திடத் தீதிலாத் திருத்தொண்டத்தொகை தரப் போதுவான்" என்றும் வரைந்த வரிகள் வாயிலாக தேசம் உய்யவும் மாதவம் செய்ததென்றிசை வாழ்ந்திடவும் தோன்றியவர் நம் நம்பியாரூரர் என நலம் சிறக்க சேக்கிழார் வாழ்த்துகிறார். அத்தோடு நிறைவடைய மறுக்கும் நம் சேக்கிழார் "இத்திருவாளன் வாசமலர் மென்கழல் வணங்கக் கிடைத்த இப்பிறப்பையே வணங்க வேண்டும்" என்று அவர் மெய்மறந்து பாடுகையில் யாமும் அல்லவா அவர் உள்ளத்தோடு ஒன்றிவிடுகிறோம்.

**இசைஞானிச் செல்வரும்**
**இலங்கையும்**

நாம் வாழும் இந்நாட்டின் தமிழ்ப் பெயர் ஈழம் அல்லது இலங்கையாகும். சங்க இலக்கியங்களில் வரும் ஈழத்துப் பூதந்தேவனார். ஈழத்துநாகனார் போன்ற பெயர்களும் கம்பராமாயணத்தில் வரும் "இலங்கை வேந்தன்" எனும் பெயரும் சிலப்பதிகாரத்தில் வரும் "கடல் சூழ் இலங்கைக் கயவாகு" எனும் சொற்றொடரும் பெரிய புராணத்தில் வரும் 'ஆழிசூழ் ஈழம்' போன்ற சொற்றொடர்களும் எம் கூற்றினை வலியுறுத்தும். இவை அனைத்திற்கும் அமைய நம் தமிழின் பெருமாளும் தம் பாடல்களில் "இலங்கைச் சிறை, இலங்கைக்கோன், இலங்கை வேந்தன்" போன்ற இனிய தமிழ்ச் சொற்றொடர்களாலேயே இந் நாட்டைக் குறித்துள்ளார். ஆகவே, வன்தொண்டர் வழிநிற்கும் நாம் வேறு பெயர் கொண்டும் எம் நாட்டின் நற்றமிழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரைச் சிதைப்பதற்கு உடந்தையாக இருக்க முடியாதென்பதை இங்கு குறித்துச் செல்லுதலை எவரும் குறையெனக் கருதார் என எண்ணுகின்றோம்.

**பற்றிக்கொண்ட பற்று**

நம் சிவநெறிச் செம்மல்கள் பலர் உலகப் பற்றுக்கள் அனைத்தையும் முற்றாகத் துறந்த நிலையில் பற்றற்றான் பற்றினையே முற்றாகப் பற்றி நின்றனர். ஆனால், அவர்களையும் அறியாது ஒரு பற்று – ஒரு பாசம் அவர்களைப் பற்றிக் கொண்டது. அதைத்தான் பைந்தமிழ்ப்பற்று என்று பகர்வர் எம் அறிஞர். இப்பற்று ஏன் அவர்களுக்கு ஏற்பட்டதென்று காரணம் காட்டி விளக்க முடியுமென்றால் அது விளக்குவது கடினம் என்றே கூறமுடியும். ஆனால் இத்தமிழ்ப்பற்று – இந்தத் தாய்மொழிப்பற்று என்பது எவரும் தடுக்க முடியாத இயல்பான பற்று என்றே கூறுவது ஏற்புடையது. நம் சமயச்சான்றோருள் இம் மொழிப் பற்றில் மிக்க உச்ச நிலையில் இருப்பவர்கள் இருவர். ஒருவர் ஞானசம்பந்தர் மற்றையவர், நம்பியாரூரர். நடுநின்று பார்க்கையில் இதில் முதன்மை இடம் ஞானசம்பந்தருக்கும் அதற்கடுத்தநிலை சுந்தரர்க்கும் உண்டு என்று கூறலாம்.

**தமிழின் பெருமாள் தாள் பணிவோம்**

தமிழுக்கே இனிமை என்பது பொருள். அத்தகைய தமிழுக்கே எத்தகைய அடைமொழிகளை நம் ஆலால சுந்தரர் அள்ளி வழங்கியுள்ளார். இதோ சில எடுத்துக்காட்டுக்கள். ''அருந்தமிழ், இன்தமிழ், இன்னிசைத் தமிழ், ஏழிசைத் தமிழ், ஒண்சீர் உறை தமிழ், ஒலிகொள் இன்னிசைத் தமிழ், குறையாத் தமிழ், சந்தம்மிகு தமிழ், சீரூர் தமிழ், செஞ்சொற் தமிழ், செந்தமிழ், தண்டமிழ், திணைகொள் செந்தமிழ், நலத்தமிழ், நற்றமிழ், பண்ணாரின் தமிழ், பலங்கிளர் தமிழ், பன்னலந் தமிழ், பாவணத் தமிழ், வண்டமிழ், இத்தகைய முறையில் இவரிடம் தமிழ் உணர்ச்சி பொங்கி வழிந்ததினாற்போலும் இவரைத் **தமிழின் பெருமாள்** என்று தமிழ் உலகம் அழைத்தது.

**நாட்டுப்பற்றும் ஊர்ப்பற்றும்**

நாட்டுப்பற்று என்பது மொழிப்பற்றிலும் நின்று முற்றிலும் வேறுபட்ட பண்பைக் கொண்டதல்ல. மாறாக இவ்விரு பற்றுக்களிடையிலும் நெருங்கிய உறவு, பிரிக்க முடியாத பிணைப்பு உண்டு என்று கூறல் மிக் கூற்றல்ல. நம் நம்பியாரூரரிடம் மொழிப்பற்றோடு நாட்டுப் பற்றும் அவற்றையும் மிஞ்சும் அளவில் தன் ஊர்ப்பற்றும் சுடர்விட்டு ஒளிர்வதைக் காண்கிறோம். தான் பிறந்த நாவலூர் தனக்கும் தன் அரசன் நரசிங்கமுனையரையனுக்கும், தான் வழிபடும் நாதனுக்கும் உரித்துடைய ஊர் என்பதை ''நாவலூர் நமக்கும் நாதனுக்கும் நரசிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுமலையரையனுக்கும் ஊர்'' என்றும் ''நாவலர் கோன் நம்பியூரன்'', ''நாடெல்லாம் புகழ் நாவலூராளி நம்பிவன்றெண்டன் ஊரன்'' என்றும் பாடிய பாடல்வரிகள் அவர் தன் ஊர்ப்பற்றில் ஊறியவர் என்பதனை இனிது எடுத்துக் காட்டுகிறது. ஏன் 'நில்லா உலகில் நில்லோம் இனி செல்வோமே'' என்று நிலையற்ற இவ்வுலகில் நிற்க விரும்பவில்லை என்று பாடிய நம் மணிவாசகர் கூட எந்நாட்டிற்கும் இறைவனாக விளங்கும் சிவன் தென்நாட்டுச் சிவன் என்று பொருள்பட ''தென்நாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று பாடி தன் தென்நாட்டுப் பற்றினைக் காட்டியதோடு நிறைவடையாது தன் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் ஊர்ப்பற்றையும் எடுத்து உணர்த்தும் முறையில் தில்லையில் கூத்தாடும் கூத்தன் தென்பாண்டி நாட்டவன் தான் என்பதை ''தில்லையுட் கூத்தன் தென்பாண்டி நாட்டான்'' என்ற வரியின் வாயிலாக உணர்த்திப் போவதை யாம் காண்கிறேம். முற்றும் துறந்த துறவிகளின் உள்ளமே தன்மொழி என்கின்றபோது - தன் நாடு என்கின்றபோது – தன் ஊர் என்கின்றபோது துடியாத்துடிக்கிறது. ஆனால் உலகியலில் முற்றும் மூழ்கியுள்ள எமக்கோ எம் மொழி பற்றியோ எம் வாழ்வகம்பற்றியோ துடிப்பில்லாவிடினும் கொஞ்சமாவது எம் நிலைபற்றி கவலைப்படுகிறேமா என்பதுதான் கேள்வி. ஏ! தமிழ் இனமே! உன் நிலைமையை யார்க்கெடுத்துரைப்பது! யார்தான் உன் நிலைமையை மாற்ற முடியும்?

**கொடுவினை நீங்க குறையாத் தமிழ் ஓதிடுக**

கடவுளின் கட்டளையை மீறுவது பாவம் என்கிறேம். ஆனல் எட்டாம் நூற்ருண்டிலேயே நம் நம்பியாரூரருக்கு இறைவன் இட்ட கட்டளை – பணித்த பணி ''**அருச்சனை பாட்டேயாகும்**. ஆதலால் நம்மை மண்மேல் சொற்றமிழ்பாடுக'' என்பதேயாகும். கடவுள் இவ்விதம் கட்டளையிட்டபோதும் கடவுள் மீதே எமக்கு நம்பிக்கையில்லை. மேலும், கடவுளுக்குத் தமிழ் தெரியுமா என்பதிலே எமக்கு ஒரு ஐயம். அதனுற்தான் ''நம்மை மண்மேல் சொற்றமிழ் பாடுக'' என்று இறைவன் பணித்தபோதும் இல்லை உன்னை எம் மண்மீது வடமொழி பாடியே வழிபடுவோம் என்று உறுதிபூண்டுள்ளோம். கடவுள் ஒருபுறம் இருக்கட்டும். நாம் தொழும் தன்மையாளனுகிய நம்பியாரூரனே கடவுளைப் பாடுகையில் ''**பண்ணிடைத் தமிழொப்பாய்**'' என்றே பாடி கடவுளைத் தமிழ் இசையின் வடிவம் என்கிருர். அதுமட்டுமா சொல்லுகிருர். ''**தன் குறையாத்தமிழ் பத்துஞ் சொல்லக்கூடா கொடுவினையே**'' என்கிருர். ஆனுல் எமக்கு அவர் கூற்றிற் கூட நம்பிக்கையில்லை. தன்னைத்தான் தாழ்த்துவதற்கு தமிழனைப் போல் வேறு ஒருவர் தாரணியில் இல்லைப் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொய்மையாளரைப் பாடாதீர்**

நம்பியாரூரர் நமக்குத் தந்துள்ள அறிவுரைகள் ஒன்றல்ல இரண்டல்ல அவை ஓராயிரமாக விரிவடைகின்றன. அவற்றுள் தலையாயது பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யாது பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழும் வாழ்வேயாகும். இதற்கு முதற்படியாக நாம் செய்ய வேண்டியது குறிப்பாக நம் தமிழ்ப் புலவர்கள் செய்ய வேண்டியது பொய்மையாளரைப் பாடாது எந்தை இறைவனைப் பாடுவதேயாகும். அந்த இறைவனைப் பாடுகின்றபோது இம்மைத் தேவைகள், இன்பங்கள் மட்டுமல்ல மறுமையிலே சிவலோகத்தை ஆளுகின்ற பெரும்பேறும் எமக்கு உண்டு என்பதேயாகும். இதோ அவர் பாடுவதைக் கேளுங்கள் —

''தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்விலும் தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப்பாடாதே, எந்தை
புகலூர் பாடுமின்! புலவீர்காள்;
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலும் ஆம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே''

இவ்விதம் தவறுகள் பல செய்யும் எம்மை, ஒரு தாயின் இரக்க உணர்வோடு கெஞ்சும் மொழியினால் எம்மைத் திருத்த முயல்கிறார் தோடுடைய செவியனின் தோழர். இவ்விதம் அன்பின் அடிப்படையில் – அறிவின் அனுபவத்திலிருந்து தான் விடுக்கும் வேண்டுகோளை யாம் ஏற்க மறுக்கின்றபோது தான்

''வஞ்சநெஞ்சனை, மா சழக்கனை
பாவியை, வழக்கு இல்லியைப்
பஞ்ச துட்டனைச் சாதுவே என்று
பாடினும் கொடுப்பார் இலை'' என்று

இடித்துரைக்கிறார். இன்று யாம் வாழ்கின்ற சூழ்நிலையில் அவருடைய அறிவுரை எவ்வளவு பொருள் பொதிந்ததாய் விளங்குகிறது. ''சொல்லப் பயன்படுவர் சான்றோர்'' என்று செந்நாப்போதர் செப்பிய கருத்தையாவது யாம் ஏற்று நம்பியாரூரர் நவின்ற [illegible]கருத்துக்களுக்கு செவிமடுத்து எம் வாழ்வில் செம்மைகாண முயல்தல் எம் கடனாகும். **''நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையான்''** என்பது சேக்கிழாரின் செந்தமிழ்க் காவியத்தில் வரும் பொருள் பொதித்த சொற்றொடராகும். இங்கே அவர் குறிக்கும் ''தொழுதல்'' என்ற சொல் அவரை வெறுமனே வணங்குதலை மட்டும் குறிக்கவில்லை. மாறாக அவர் வாழ்ந்த வளமான வாழ்வு எம் வாழ்விற்கு வழிகாட்டியாய் அமைய வேண்டும் என்பதே அக்கூற்றின் உட்பொருள் என்பதை உய்த்து உணர்ந்து உய்யும் வழி காண்போமாக.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற வெளியீடுகள்

1. மறைமலையடிகள் (ஆங்கிலம்)
2. கப்பலோட்டி செக்கிழுத்த செம்மல்
3. சேர். பொன். இராமநாதன்
4. மாணிக்கவாசகர் மாண்பு
5. வாழ்விடத்தைக் காத்த வன்னியசிங்கம்
6. திருக்கோணமலையும் கோணேசுவரமும்
7. எந்நோக்கில் ஆனந்தகுமாரசாமி
8. பேராற்றல் வழிபாடு

## வெளிவரவிருப்பவை

### இலக்கியம்

1. என் நோக்கில் சோமசுந்தரப் புலவர்
2. ,, ,, பாரதி
3. ,, ,, பாரதிதாசன்
4. ,, ,, மறைமலையடிகள்
5. ,, ,, திரு. வி. க.
6. விறுபுகழ் விபுலானந்த அடிகள்
7. உலக மா கவிஞர் செகப்பிரியர்
8. செந்தமிழ் வாழாதா?
9. கவிஞன் காணும் கனவு
10. திருக்குறள் அறநூலா இலக்கியமா?
11. வள்ளுவன் கண்ட காதல்

### மெய்விளக்கம்

1. என் இதயத்தில் இடம்பெற்ற இயேசு
2. புவிக்குப் புதுவழி காட்டிய புத்தர்
3. அப்பர் அடிச்சுவட்டில்
4. நாவலர் ஒரு மதிப்பீடு
5. மணிவாசகர் கடவுளைக் கண்டாரா?
6. கடவுளுக்குத் தமிழ் தெரியுமா?
7. மாணிக்கவாசகர் தன்னை ஏன் தாழ்த்திப் பாடினர்.
8. அரவிந்தர் அருள் வாழ்வு

### அரசியல்

1. என் நோக்கில் சேர். பொன். அருணாசலம்
2. ,, ,, சா.ஜே.வே. செல்வநாயகம்
3. ,, ,, கு. வன்னியசிங்கம்
4. ,, ,, அறிஞர் அண்ணா
5. ஜவகர்லால் நேரு - மதிப்பீடு
6. அண்ணல் காந்தியும் அருந்தமிழரும்
7. நிலமும் வாழ்வும்
8. மொழியும் வாழ்வும்

---


**'புறத்தூய்மை மில்க்வைற்றாலாகும்**

**அகத்தூய்மை அடியார் வரலாற்றை அறிவதனாலாகும்'**




**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

அ. பெ. எண். 77.

தொலைபேசி: 7233. யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாசிரியர்

## கதிரவேலுப்பிள்ளையின்

## கருத்துரை

நண்பர் ஈழவேந்தனின் சமயப் பணியின் வரிசையிலே இன்னுமொரு மலராக இந்நூல் வெளிவருகிறது. சுந்தரரைப் பற்றிப் புதிய கோணத்தில் மீண்டும் எம்மை நிறுத்திப் பார்க்க வைக்கும் இந்நூல் சைவ மக்களாலும் தமிழ் மக்களாலும் ஏற்புடையதென வரவேற்கப்படும்.

பல சமயங்களையும் தழுவி வாழும் தமிழர்களுக்கு எச் சமயத்திலும் உள்ள உண்மைகள் பொதுச் சொத்தாகியிருக்கிறது. சமயத்தில் சமரசம் கண்ட பெருமை தமிழனுக்குரியது. சமயத்தை ஊற்றாய் வைத்து ஆன்மீகத்தின் அடிப்படையில் அறத்தைக் கண்டவர் தமிழர். அந்த அறத்தின் அடிப்படையில் அரசியலைக் கண்டவர் தமிழர். ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்ற அப்பரின் அரசியல் அவரின் ஆன்மீகத்தில் இருந்து எழுந்தது. ஆன்மீகத்தைத் தூண்டும் இந்நூல் வாழ்க்கைத்துறை அனைத்திற்கும் அதுவே ஆதாரம் என்று காட்டுகிறது. ஆன்மீக இயக்கத்தில் குறைந்தவர்கள் மற்றத்துறைகளிலும் உண்மையான நிறைவினைக் காணமாட்டார்கள். ஆன்மீக இயக்கம் உடையவர்கள் எதிலும் நிறைவு காண்பார்கள். ஈழவேந்தனின் இந்நூல் சுந்தரரை எமக்கு நினைவூட்டும்மட்டிலே எமது ஆன்மீகத்தையும் தூண்டுகிறது. ஈழவேந்தனின் முயற்சிக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கிறேன்.

**சி. கதிரவேலுப்பிள்ளை.**
தேசியப் பேரவை உறுப்பினர்.

---

இந்நூலின் வருவாய் கொழும்புத்துறை மன்றுளாடும் பிள்ளையார் கோயில் கட்டட நிதிக்கு ஒப்படைக்கப்படும்.

**விலை ரூ. 1/-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org